அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

பிலவ வருடம் சித்திரை - வைகாசி ஏப்ரல் 2022 முரசு 15 ஒலி 173



ஓதாது உணர்ந்திட ஒளியளித்து எனக்கே
ஆதாரமாகிய அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி அகவல்

## ஏப்ரல் 21 வியாழன் வள்ளல் பெருமானார் அருட்பெருஞ்ஜோதி அகவல் எழுதிய நாள்

பிரதி ஒன்றுக்கு ரூ.10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# பொள்ளாச்சி
# அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை

ந ட த் து ம்

## அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்

# ஆழ்நிலை தியான முகாம்

இ ய ற் கை ச் சூ ழ லி ல் மூ ன் று நா ட் க ள்



## 2022 ஏப்ரல்
## 29, 30, மே 1
**வெள்ளி, சனி, ஞாயிறு**

### இ ம் மு கா மி ல்

- **மௌனம்**
- **யோகாசனம்** • **பக்தி**
- **தியானம்** • **சத்சங்கம்**
- **ஜீவகாருண்யம்**

போன்றவை நடைபெறும்

முன்பதிவு அவசியம்

முன்பதிவிற்கு : **9894010007**

பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் ஏப்ரல் 28 வியாழன் அன்று மாலைக்குள் வந்துவிட வேண்டும். தங்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
2. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் 2 பெட்ஷீட் முதலியவையும் ஆண்கள் டீ ஷர்ட், ஷாட்ஸ் மற்றும் பெண்கள் சுடிதார் போன்றவை கண்டிப்பாக எடுத்துவரவும்.
3. குறிப்பு எடுத்துக்கொள்ள நோட்டு, பேனா, டார்ச் லைட், ஏர் பில்லோ, வாட்டர் பிளாஸ்க் போன்றவை எடுத்து வரவும்.
4. 17–55 வயதிற்கு உட்பட்டோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
5. பயிற்சி முகாம் மே 1 ஞாயிறு மாலை 5 மணிக்கு முடிவடைந்துவிடும்.

இடம்: **சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
குகைபெருமாள் சித்தர் கோயில் செல்லும் வழி அர்த்தநாரிப்பாளையம் பொள்ளாச்சி

**வகுப்பிற்கு தேவையான புத்தங்களுக்கு ரூ. 700/- செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.**


நிகழ்ச்சி அமைப்பு: **அருள்திரு.பாபு.சாது**

அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை www.vallalarmission.org

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

அன்பு உள்ளங்களே! மனத்தை வேறு எந்தவித ஆபாசத்திலும் செல்லவொட்டாது இறைவனுடைய திருவடியிலேயே நிறுத்த வேண்டும் என்பது பெருமானார் அருளிய கரண ஒழுக்கமாகும். அதன்பொருட்டே இங்கு **அருட்பெருஞ்ஜோதி அகவல்** என்ற பதிகம் அளிக்கப்படுகின்றது. இதை நாளும் ஓதி பரம்பொருளின் திருவடியை நினைந்து உய்வடைவோமாக!

தேவிஉற்று ஒளிர்தரு திருஉருவுடன் எனது
ஆவியில் கலந்து ஒளிர் அருட்பெருஞ்ஜோதி
எவ்வழி மெய்வழி என்ப வேதாகமம்
அவ்வழி எனக்கு அருள் அருட்பெருஞ்ஜோதி
வையமும் வானமும் வாழ்த்திட எனக்குஅருள்
ஐயறிவு அளித்த அருட்பெருஞ்ஜோதி
சாமாறு அனைத்தும் தவிர்த்து இங்குஎனக்கே
ஆமாறு அருளிய அருட்பெருஞ்ஜோதி
சத்தியமாம் சிவசத்தியை ஈந்து எனக்கு
அத்திறல் வளர்க்கும் அருட்பெருஞ்ஜோதி
சாவா நிலைஇது தந்தனம் உனக்கே
ஆவா எனஅருள் அருட்பெருஞ்ஜோதி
சாதியும் மதமும் சமயமும் பொய்என
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி
மயர்ந்திடேல் சிறிதும் மனம்தளர்ந்து அஞ்சேல்
அயர்ந்திடேல் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
தேசுறத் திகழ்தரு திருநெறிப் பொருளியல்
ஆசறத் தெரித்த அருட்பெருஞ்ஜோதி
காட்டிய உலகெலாம் கருணையால் சித்தியின்
ஆட்டியல் புரியும் அருட்பெருஞ்ஜோதி
எங்குலம் எம்இனம் என்ப தொண்ணூற்றாறு
அங்குலம் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
எம்மதம் எம்இறை என்ப உயிர்த்திரள்
அம்மதம் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
கூறிய கருநிலை குலவிய கீழ்மேல்
ஆறியல் எனஉரை அருட்பெருஞ்ஜோதி. 224



தங்கள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, அமைதி நிரம்ப ஜோதி வழிபாட்டினை நாள்தோறும் செய்யுங்கள்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்குக!
வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!

திருச்சிற்றம்பலம்

# திருவருள் முறையீடு

தயவுத்திரு லோக ஆனந்தபாரதி, பெங்களூர்.



நானோர் எளிமை அடிமை அன்றோ நல்லன் அல்லன் என்று
தானோ நின்அன்பர் தகாது என்பர் ஈதுஎன்றுதான் நினைத்தோ
ஏனோ நின்உள்ளம் இரங்கிலை இன்னும் இரங்கிலையேல்
கான் ஓடுவேன் கொல்கடல் விழுவேன் கொல்முக்கண்ணவனே –15

(கான் – காடு, முக்கண்ணவன் – நெற்றிக் கண் உடையவன்)

**உரை:**

*“மூன்று கண்ணுடைய முதல்வனே! எளியவனாகிய நான் உனக்கு தொண்டு பூண்ட அடிமை இல்லை என்றோ; மன, வாக்கு, காயங்களால் ஜீவகாருண்ய விரதம் கொண்டு ஒழுகும் நல்லவன் இல்லை என்றோ; உன்னுடைய மெய் அன்பர்கள் என்னை தகாதவன் என்று சொன்னதை நினைத்தோ என்ன காரணம் கருதியோ இன்னும் நின் திருவுள்ளம் என்னிடத்தில் இரக்கம் காட்டவில்லை. சென்ற காலம் போகட்டும். இனி, வருங்காலத்திலாவது எனக்கு நீ இரங்கவில்லை என்றால் கொடிய மிருகங்கள் வாழும் காட்டிற்கு ஓடியோ அல்லது கடலில் விழுந்தோ என் உயிரை மாய்த்துக் கொள்வேன். அதற்கு முன் இரங்கி உன் திருவருளை எனக்கு தந்தருளுவாயாக!” என்று வள்ளல் பெருமான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்தில் இறைஞ்சுகின்றார்.*

**விளக்கம்:**

*இறைவனை அடையும் மெய்ஞானப் பயிற்சியில் ஈடுபட்டு ஒழுகும் பெரியோர்கள், ஆன்மாவாகிய தன்னை முதலில் இறைவனுக்கு அடிமையாகக் கருதி, தொண்டு பூண்டு ஒழுகுவது மரபு. அதற்கு ஏற்பவே வள்ளல் பெருமானும் தன்னை இங்கு* **“அடிமை”** *என குறிப்பிடுகின்றார்.*

***அடிமைசெயப் புகுந்திடும் எம்போல்வார் குற்றம்***
*ஆயிரமும் பொறுத்தருளும் அரசே நாயேன்*
*கொடுமைசெயு மனத்தாலே வருந்தி அந்தோ*
*குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன்*
*கடுமைசெயப் பிறர்துணிந்தால் அடிமை தன்னைக்*
*கண்டிருத்தல் அழகன்றே கருணைக்கு எந்தாய்*
*செடிமையுளப் பாதகனேன் என்செய்வேன் நின்*
*திருவுளத்தை அறிந்திலேன் திகைக்கின்றேனே*

மேற்கண்ட மகாதேவமாலை அருட்பாவிலும் தன்னை ஒருமுறைக்கு இருமுறை அடிமை என பெருமான் குறிப்பிடுவது காணலாம். இறைவனின் அடியவர்களுள் தான் கடைப்பட்ட அடியவன் என்பதை உணர்த்த **"நானோர் ஏழை அடிமை"** என்கிறார்.

கருணை குணம் உடையவரை உலக மக்கள் 'நல்லவர்' என்று புகழுவது வழக்கம். அவர் மனம், வாக்கு, உடம்பால் பிற உயிர்களுக்கு நலம் புரிந்து இறைவனிடத்தில் அன்பு செலுத்துவார். "வெண்குணத்தான் அல்லன் மிகுநல்லன்" என்பது அருட்பா. இங்கு பெருமான் தன்னை நல்லவன் இல்லையா? என்று இறைவனிடம் கேட்க **"நல்லன் அல்லன் என்று தானோ"** என்று நயம்பட உரைக்கின்றார்.

உண்மை இல்லாதவரை பற்று அற்ற அடியார்கள் தமது கூட்டத்தில் ஒருவனாக கொள்வது இல்லை. அப்படி அவர்களுக்கு இறைவன் அருள் செய்தாலும் 'அவர்களுக்கு ஏன் அருள் செய்தீர்?' என்று இறைவனையே வினவிய நிகழ்வுகள் நம் நாட்டில் உண்டு. அதை நினைத்த வள்ளல் பெருமான், அடியார்கள் தன்னை தகாதவன் என்று சொன்னதால் எனக்கு நீ அருளாமல் இருக்கின்றாயா? என வினவ, **"நின் அன்பர் தகாது என்பர் ஈது என்றுதான் நினைத்தோ"** என்று இறைஞ்சுகின்றார்.

இன்னும் வேறு காரணம் ஏதென்று அறியாத பெருமான், **"ஏனோ நின் உள்ளம் இரங்கிலை"** என்று இறைவனை கேட்கின்றார். சென்ற காலம் போகட்டும் இனி வருங்காலத்திலேனும் உன் திருவருள் எனக்கு தாமதமின்றி கிடைக்க வேண்டும் என வேண்டுபவராய் **"இன்னும் இரங்கிலையேல்"** என்றார்.

வருங்காலத்திலும் இறைவன் திருவருள் கிடைக்கப் பெறாவிட்டால் திருவருள் பெறாது உயிர் வாழ்வது வீண் எனக்கருதி, தான் கொடிய மிருகங்கள் வாழும் காட்டிற்கு ஓடியோ அல்லது கடலில் விழுந்தோ தனது உயிரை மாய்த்துக் கொள்வேன். எனவே, அதற்கு முன் இரங்கி உன் திருவருளை எனக்கு தந்து ஆட்கொள்ள வேண்டும் என்று உறுதிபட வேண்டுகின்றார்.

"திருவருளைப் பெறாத வாழ்வு வீண். இவ்வாழ்விலேயே திருவருள் பெறவேண்டும் என்பதற்கு அதிதீவிர விருப்ப முயற்சி செய்ய வேண்டும்" என்பதை இத்திருவருட்பா நமக்கு தெரிவிப்பதை உணர்ந்து சன்மார்க்க வழி நின்று அதன் ஒழுக்கங்களில் பழகி அவ்வருளைப் பெற முயற்சி செய்வோம்.

திருச்சிற்றம்பலம்



# மனிதம் உய்க்க ஓர் மார்க்கம்

தயவுத்திரு அருணை மதன்குமார் அவர்கள்.

*மனித குலத்தின் பயணப்பாதை சீர்பட வேண்டுமென்று எண்ணற்ற வழிகளும், மார்க்கங்களும், சமயங்களும், மதங்களும் தோன்றின. தோன்றினவையெல்லாம் தங்கள் காலத்திற்கு ஏற்ப உரிய முன்னெடுப்புகளைச் செய்தன. அதைத் தொடர்ந்து வந்த கால மாற்றம், எதை எடுத்துக் கொள்வது? எதைத் தவிர்ப்பது? என்கிற சிக்கல்களில் தன்னை நிலைநிறுத்தி வாதங்கள் செய்தன. இவைகளால் புதிய பரிமாணங்கள் துவங்கி பலகிளைகளாய் மனித குலத்தை கலக்கத்தில் ஆழ்த்தி பிறப்பின் நோக்கம் பற்றிய நிலையை முற்றும் கைவிட்டு வேறு பாதையில் அழைத்துச் சென்றன. அது உச்சம் பெற்ற காலத்தில்தான் நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.*

*ஏதோ ஒரு புள்ளியில் துவங்கிய சிந்தனைகள்தான் மனிதகுலத்தின் வளர்ச்சியை தீர்மானித்தது. அந்த ஏதோவொரு புள்ளியென்பது கருணையில், அன்பிலிருந்து துவங்கட்டுமே என்பதுதான் சன்மார்க்கம் கண்ட உயரிய நெறி.*

*“அடக்கம் அமரருள் உய்க்கும்” என்பது வார்த்தையென்றால் “மரணமிலாப் பெருவாழ்வு” என்பது செயல், சத்தியம். இதனை நாம் அறியத் துவங்கும் முன்பாக மனிதகுல வரலாற்றினை திரும்பிப் பார்க்க வேண்டும்.*

*மனிதகுலத்தின் வரலாறு என்பது பெருவெடிப்பிலிருந்து துவங்கி தாவரங்களோடு சங்கமித்து பல்வேறு இனக் குழுக்களாய் மலர்ந்து அவற்றுள் குரங்கினத்தின் எச்சமாய் மனிதன் பிறந்து, நாடோடிகளாய்த் திரிந்து உணவுக்காக போராடி, குடும்ப அமைப்பினைக் கண்டு வேளாண்மை செய்து பண்பாடு, கலாச்சாரம், அரசியல் என நவீனமடைந்ததுதான் நம் பயணங்கள் என்பது அறிவியலின் அடிப்படையில் ஒரு சுருக்கமான வரலாறு.*

*ஆனால், அண்மையில் பெரிய விவாதத்திற்கு உள்ளான “மனிதகுலத்தின் வரலாறு” (*HOMO SAPIENS*) என்கிற புத்தகம் நம் பார்வையை பொய்த்துப் போகும்படி செய்தது. மனித குலத்தின் ஆழமான, நெடிய பேசப்படாத பக்கங்களைப் பேசியிருக்கிறது இப்புத்தகம். அதன் ஆசிரியர்* **யுவல் நோவா ஹராரி** *என்பவர் மனித*

குலத்தின் வரலாற்றை 1. அறிவுப் புரட்சி, 2. வேளாண்மைப் புரட்சி, 3. மனிதகுல ஒருங்கிணைப்புப் புரட்சி, 4. அறிவியல் புரட்சி என்ற கண்ணோட்டத்தில் அணுகுகின்றார்.

மனித குலத்தின் துவக்கமே நெருப்பிலிருந்துதான் புறப்பட்டது என்கிறார். **"ஜோதியில் துவங்கிய நாம் ஜோதியில் ஐக்கியமாக வேண்டும்"** என்ற சன்மார்க்க படிநிலையை இது நினைவுபடுத்துகிறது. பல்வேறு இனக்குழுக்கள் துவக்கத்தில் இருந்தாலும் 1. Homo erettus 2. Homo neader thalensis 3. Homo sapiens ஆகிய இனக்குழுக்கள்தான் காலத்தில் நிலைத்து நின்றன. மற்றவையெல்லாம் இயற்கைக்கும் மற்றைய இன குழுக்களுக்கும் ஈடுகொடுக்க முடியாமலும் கால சக்கரத்தில் இருந்து விலகிக் கொண்டன. எஞ்சிய மூன்று இனக் குழுக்கள் பல பாதைகளை வகுத்து பல ஆயிரம் வருடங்கள் பயணித்தாலும்கூட **'ஹோமோ சேப்பியன்ஸ்'** என்ற மனித குலம் மாத்திரம்தான் நிலைத்து நிற்க முடிந்தது. மனித குலத்தால்தான் நிலைத்து நிற்க முடிந்தது என்பதைக் காட்டிலும் மனிதகுலம் பிற இனங்கள் வாழ வழிவகை செய்யவில்லை என்பது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பகுதி. தோற்றத்தில் நம்மைப் போலவே இருந்த Homo erettus, Homo neader thalensis காணாமல் போயின என்பதைவிட மனிதகுலம் தாம் நிலைத்து வாழ்வதற்கு பிற இனங்கள் தடையாக இருக்குமோ என்று நினைத்து படுகொலை செய்தன என்கிற ஒரு கசப்பான வரலாற்றினை யூவல் நோவா ஹராரி நம்மோடு பகருகின்றார். ஜோதியில் துவங்கிய பயணத்தை ஜோதியில் முடிவு செய்ய வேண்டும் என்று வியந்து பார்த்த இடத்தில், அடுத்த படிநிலைகளிலேயே மனித குலம் படுகொலை செய்து பிழைக்கின்ற நிலைக்கு வந்த காரணம் விளக்கம் இல்லாமையும், இருள் படிந்த வாழ்க்கை முறையில் இருந்ததும்தான்.

அதற்குப் பிறகு, உயிர் இருப்புக்கான போராட்டத்தில் மொழிக்கான அறிவாற்றல் புரட்சியும், உணவு முறைக்கான வேளாண்மை புரட்சியும் நடந்தேறின. உலகத்தின் மூத்த மொழி என்று மார்தட்டிக் கொண்டு பேசும் இக்காலத்தில் மொழியை உள்வாங்கிய நம் முன்னோர்கள் அதனைக் கொண்டு என்ன செய்தார்கள் என்று தேடினால், அறிவுக்கு எட்டாத நம்ப முடியாத கற்பனைக் கதைகளைப் பேசித் திரிந்தார்கள் என்று பதிவு செய்கிறார் ஹராரி. **கதைகளால் உருவான மனிதர்களும் அவற்றால் ஏற்பட்ட பயமும்தான் வழிபாடு என்கிற நிலைப்பாட்டிற்கு மனித குலத்தை கொண்டு வந்தது** என்பது இங்கு கருதற்குரியது.

வழிபாட்டிற்குப் பின்பான மனித குலத்தின் வரலாற்றுப் பயணம் ஒரே நேர்க்கோட்டில் மனித குல ஒருங்கிணைப்பு மற்றும் அறிவியல் புரட்சி எனும் மாபெரும் சமநிலையை அடைந்தது. இதனிடையே இயற்கையை நோக்கியும் விண்ணை நோக்கியும் வணங்கியது மனித குலம். அதன் வழியே வானவியல் கோட்பாட்டினை கண்டறிந்தது. வாதம், தர்க்கம் என அறிவு நிலைகளில் தன் வரலாற்றினையும் பண்பாட்டினையும் நிலைநிறுத்தியது. காலம் கடந்து சிந்தித்தது. உலகம் உருண்டை என்று அறிவியல் துணைகொண்டு சொல்வதற்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பாகவே உலகினை உருண்டை என்று வரையரை செய்தது. விஞ்ஞானி டேட்டன் என்பவர் அணுவைப் பற்றி பேசிய காலத்திற்கும் முன்னதாகவே தமிழ் இலக்கியங்கள் அணுவைப் பற்றிப் பேசியிருக்கின்றது.

தற்கால அறிவியல் யுகத்தின் தலைசிறந்த கண்டுபிடிப்புகளான நியூட்டனின் இயங்குவியல் தத்துவத்தையும், ஐன்ஸ்டீனின் ஆற்றல் தத்துவத்தையும் போகின்ற போக்கில் பேசும் ஆற்றலைப் பெற்றிருந்தது மனித குலம். அறிவியல் புரட்சியின் உச்சத்தினை அளந்து பார்த்தவராகிய ஸ்டீபன் ஹாகின்ஸின் "A Brief History of Time" என்ற நூலின் மையப்பொருளான காலம் மற்றும் நேரத்தினை **"என்றும் உள்ளவனாகிய இறைவனை, என்றும் உள்ளதாகிய காலம்"** என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடும் அளவிற்கு வளர்ச்சி அடைந்திருந்தது.

உலகம் விரிந்து கொண்டே செல்கிறது என்பதை நடராஜ தத்துவத்திலும், சிற்பக் கலையை வான் உயர் கோபுரங்களிலும் செதுக்கும் அளவிற்கு உயர்ந்தான் மனிதன். அதோடு நில்லாது அறம் பாடினான். "ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர்" என்கிற உயரிய பக்குவ நிலையை அடைந்தான். செல்வச் செழிப்போடும், இன்பத்தோடும், வழிபாட்டோடும் தொடர்ந்த அந்த பாதையில் திடீர் தடுமாற்றம் எப்படி ஏற்பட்டது?

உலகிற்கு அறத்தினை சொன்னவன், வாழ்வியலை வகுத்தவன், வேளாண்மையைக் கொடுத்தவன் எதற்காக அறத்தினைத் துறந்து வாழ்வியலை நிர்மூலமாக்கி வாழக் கூடிய நிலைக்கு வந்தான் என்றால் "செல்வம்" என்பதுதான் விடையாய் வந்தமைகின்றது. "When wealth accumlates man will decay" என்ற வார்த்தைகள் அர்த்தம் பொருந்தியவையாகவே இருக்கின்றது. செல்வத்தாலும் அதன் ஊடாகப் பெற்ற செழிப்பாலும்தான் காமம், இச்சை என்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டு அதனால் ஏற்பட்ட தோல்விக்கு பதில் தேடி அலைந்து தவறான வழியை சென்றடைந்தான்.

*அறம் பாடிய இனத்தில் பிறந்த அதே மனிதன்தான் அன்புடைமையை உலகிற்குச் சொன்ன அதே மனிதன்தான், கள், களவு, காமம், கொலை, பொய் என்ற பஞ்சமகா பாவங்களையும் செய்யும் அவல நிலைக்கு வந்தடைந்தான். இவ்வகை அறமற்ற, அன்பற்ற வாழ்க்கை முறையினால் உயர்வு, தாழ்வு என்று பேதம் பிரித்துப் பார்க்கும் மனப்பான்மை அமைந்து விட்டது.*

*இவ்விதம் அழித்தலில் தொடங்கி இடையில் உயர்ந்த நிலையையடைந்து மீண்டும் அழித்தலில் வந்து நிற்கின்ற இம்மனித குலத்தின் போக்கினை மாற்றுவதற்காகவே இறைவனால் வருவிக்கவுற்றவர்தான் நம் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் அவர்கள். ஜோதியில் துவங்கியதாகச் சொல்லப்படுகின்ற மனித குலத்தின் வரலாறு மீண்டும் ஜோதியில் ஐக்கியமாக்குவதே நம் வள்ளல் பெருமானார் தந்த சுத்த சன்மார்க்கத்தின் நோக்கமாகும்.*

*மனித குலத்தில் ஏற்பட்ட இந்தத் தடுமாற்றத்திற்குக் காரணம் இறைவனிடத்தில் அன்பு இல்லாது போனதும், உயிர்களிடத்தில் இரக்கம் இல்லாது போனதும் மேலும், இம்மனிதப் பிறப்பின் நோக்கத்தைக் குறித்த சிந்தனை இல்லாமலும், நாம் எங்கிருந்து வந்தோம் எதை நோக்கி நம் பயணம் இருக்க வேண்டும் என்ற விசாரணை இல்லாது போனதும்தான் என்பதை உணர்ந்து இதையே சன்மார்க்கத்தின் சாதனமாக படிநிலைகளாக அமைத்தார்.*

*அன்புருவான மனித குலத்தை அன்பு கொண்டே உய்வுபெற வழிவகுத்தார் பெருமானார். அதன் நீட்சியாகவே*

**அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்தி சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும்**
**இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற்கு என்றே எனையிந்த**
**உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே**

*என்று பாடியுள்ளார். ஏற்றத்தாழ்வு கொண்ட சமுதாயத்தை, பிறருக்கு கொடுப்பதன் மூலமாகவும் பெறுவதன் மூலமாகவும்தான் சமநிலைக்குக் கொண்டுவர முடியும் என்பதை அறிவித்ததோடு அல்லாமல் சத்திய தருமசாலையை நிறுவியும் "நீங்கள் எல்லவரும் இப்புண்ணிய வைபவத்தில் பங்கு கொண்டு புண்ணியத்தை பாகம் செய்து கொள்ளுங்கள்" என்று உபதேசித்தும் அருளினார்.*

**உள்ளலேன் உடையார் உண்ணவும் வறியார்**
**உறுபசி உழந்து வெந்துயரால்**
**வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ**

**மற்றிதை நினைத்திடுந் தோறும்**
**எள்ளலேன் உள்ளம் எரிகின்றது, உடம்பும்**
**எரிகின்றது என்செய்வேன் அந்தோ**
**கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்**
**குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்**

*என்று துடித்துப் போனார். மனித குலம் பேதமுற்று இருப்பதைக் கண்டு கண்ணீர் சிந்தினார். செல்வத்தின் அடிப்படையில் உயர்வு தாழ்வுற்று இருந்த மனித குலம் சாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் பலபேதமுற்று இருப்பதைக் கண்டு மேலும் மனம் வாடினார்.*

**சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே**
**சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே**
**ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்**
**அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே**
**நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான**
**நிருத்தமிடும் *தனித்தலைவர் ஒருத்தர்* அவர்தாமே**
**வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய**
**மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே**

*மேற்கண்ட பாடலில் மனித குலத்தைக் குறித்த தன் வேதனையை வெளிப்படுத்தியதோடு இப்படிச் சமய மதத்தின் பெயராலேயே உயிர்கள் பேதமுற்று இருப்பதற்குக் காரணம் 'கடவுள் ஒன்று' என்ற அறிவு விளக்கம் இல்லாமையே என்பதை உணர்ந்து* **“தனித்தலைவர் ஒருத்தர்”** *என்று குறிப்பிட்டுள்ளார். இதனையே சுத்த சன்மார்க்கத்தின் கொள்கையாக அமைக்கும்போது* **“கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்”** *என்றார்.*

*அப்படிச் சொன்னதோடல்லாமல் ஜீவர்களாகிய நாம் அனைவரும் ஒன்று என்ற சிந்தனை இல்லாமையால்தான் மானுடம் தங்களுக்குள்ளும் சரி, பிற உயிர்களிடத்தும் சரி அன்பு இல்லாமல் ஒருவருக்கொருவர் தீங்கு செய்து கொள்கின்றனர். மிருகங்களைப் போல் பிற உயிர்களைக் கொன்று அதன் மாமிசத்தை உண்ணும் அவல நிலையில் வாழ்கின்றனர். இவ்வுண்மையை உணர்த்தவே,* **“ஜீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாய் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால் ஓர் உரிமையுள்ள சகோதரர்களேயாவர். சகோதரர்களுள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்ற போதும், துக்கப்படுவார் என்று**

**அறிந்தபோதும் அவரைத் தமது சகோதரர் என்று கண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கம் உண்டாவது சகோதர உரிமையாகலின், ஒரு ஜீவன் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும், துக்கப்படுமென்று அறிந்தபோதும் மற்றொரு ஜீவனுக்கு உருக்கம் உண்டாவது பழைய ஆன்ம உரிமை என்று அறிய வேண்டும்"** *என அருளியுள்ளார்கள்.*

*அதாவது, ஜீவர்களாகிய நாம் அனைவரும் இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் அம்சம் பொருந்தியவர்களாய் இருக்கின்றோம். அதாவது, நாம் அனைவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள். எனில், நாம் அனைவரும் சகோதரர்கள். இந்த உரிமை உணர்வு நம்மிடையே வந்துவிட்டால் மனித குலம் மட்டுமின்றி உயிர்க்குலமே ஒன்று என்ற ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை நம்மிடையே ஓங்கி அன்பு பெருகும். இதை உணர்த்தும் விதமாகவே* **"எல்லா உயிர்களும் நமக்குச் சகோதரர்களே என்று உணர்க. சாதி, சமய, மத, இன வேறுபாடுகளைத் தவிர்த்திடுக. புலால் உண்ணற்க. எவ்வுயிரையும் கொலை செய்யற்க"** *என்று அருளி அதை சன்மார்க்கக் கொள்கையாகவும் அமைத்தார்கள்.*

*ஜோதியிலிருந்து பிறந்த நாம் அனைவரும் ஒன்று என்ற சிந்தனையில்லாமலும் நம் தந்தை, நம் தாய் ஒருவர்தான் என்ற உணர்வு இல்லாமலும் இருந்தால் எவ்விதம் அந்த ஜோதியில் ஐக்கியமாவது? எனவே, அதற்குத் தடையாய் இருப்பனவற்றை விட்டுவிடுவதையே நியதியாக பின்வருமாறு அருளியுள்ளார்.*

**"சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கியத் தடைகளாகிய சமயம், மதம் முதலிய மார்க்கங்களைப் முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக் குரோதம் முதலிய நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களாகிய இவர்கள்தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் ஆவார்கள்" – திருவருட்பா வசனபாகம்.**

*கடவுள் அருட்பெருஞ்ஜோதி என்பதாலும், அத்தெய்வத்திற்குப் பிறந்த நாம் அனைவரும் சகோதரர்கள் என்றபடியாலும்* **"சிறுதெய்வ வழிபாட்டினையும், தெய்வத்தின் பெயரால் பலியிடுவதையும் விலக்குக"** *என்று கூறியருளியுள்ளார்.*

*தெய்வம் ஒன்றென்றும் அஃது அருட்பெருஞ்ஜோதி என்றும் அருளிய பெருமான் அவர் எங்கு உரைகின்றார் என்பதையும் தெள்ளத் தெளிவாக சுத்த சன்மார்க்கத்தில் அருளியுள்ளார். இதை இறைவனே தனக்கு உரைத்ததாக அருளுகின்றார்.*

**உயிருள்யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே**
**உயிர்நலம் பரவுகென்று உரைத்த மெய்ச்சிவமே**

இதை விளக்கும் விதமாகவே **"உயிர்க்குலமே கடவுள் விளங்கும் ஆலயமாகக் கருதி உயிர்க்கு இரங்கி இதம் புரிக"** என்று அருளியதோடு அதையே கடவுள் வழிபாடாகவும் அமைத்தார்கள். "ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு" என்ற வள்ளல் பெருமானின் வாக்கே இதற்கு அகச்சான்று.

மேலும், இறைவன் உயிருள் விளங்குவதால், ஆன்மாக்களாகிய நம்முள் விளங்கும் இறைவனை உண்மையான அன்போடு கருத்தில் கருதி வழிபாடு செய்ய வேண்டும். அஃதாவது, ஜோதியோடு ஐக்கியமாவது ஒன்றை மட்டுமே லக்ஷியமாகக் கொண்டு அவரை ஒருபோதும் மறவாமல் நினைந்து வாழவேண்டும். இதையே **"உண்மை அன்பால் கடவுளை வழிபாடு செய்து கடவுள் ஒளியை நமக்குள் காண்க"** என்ற சன்மார்க்கக் கொள்கையாக வகுத்தமைத்தார்.

இந்த சிந்தனையே பெருமானாரை முத்தேக சித்தி பெற்று மரணமிலாப் பெருவாழ்வை அடைவதற்கான வழியை தந்தது. இதனை மனித குலம் பின்தொடர வேண்டுமென்ற எண்ணத்தினாலும், ஜோதியில் துவங்கிய நாம் மீண்டும் ஜோதியைச் சென்று சேரவேண்டும் என்றும், அடிப்படையில் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்றும் அருட்பெருஞ்ஜோதி இறைவனே இங்கு சுத்த சன்மார்க்கத்தை வள்ளல் பெருமானாரின் மூலமாக நமக்குத் தந்தருளினார் என்றால் மனித குலத்திற்கு சுத்த சன்மார்க்கம் எவ்வளவு அவசியம் என்பது நன்கு விளங்கும். இதனால், **மனிதம் உய்க்கவோர் மார்க்கம் சுத்த சன்மார்க்கம் ஒன்றே என்பது தெளிவு.**

**தருணம் இஞ்ஞான்றே சுத்த சன்மார்க்கத்**
**தனிநெறி உலகெலாம் தழைப்பக்**
**கருணையும் சிவமே பொருள்எனக் கருதும்**
**கருத்தும்உற்று எம்மனோர் களிப்பப்**
**பொருள்நிறை ஓங்கத் தெருள்நிலை விளங்கப்**
**புண்ணியம் பொற்புற வயங்க**
**அருள்நயந்து அருள்வாய் திருச்சிற்றம் பலத்தே**
**அருட்பெருஞ் ஜோதிஎன் அரசே.**

**போற்றி நின் பேரருள் போற்றி நின் பெருஞ்சீர்**

திருச்சிற்றம்பலம்

# மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

ஒரு கிராமத்திலிருந்த பெரியவர்களெல்லாம் ஒன்றுகூடி பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அந்த கூட்டத்திலிருந்த ஒரு பெரியவர் அந்த கிராமத்திற்கு ஒரு முனிவர் வந்திருப்பதாகவும், அம்முனிவர் ஆற்றங்கரையில் தங்கியிருப்பதாகவும், அனேக அற்புதங்களை அவர் செய்வதாகவும் தெரிவித்தார். எனவே, அவரைக் காண அனைவரும் செல்லத் தயாரானார்கள்.

அச்சமயம், அக்கூட்டத்தில் ஒருவராக இருந்த ஒரு கூண்டுக்கிளி அப்பெரியவரை நோக்கி, 'நான் இக்கூண்டிலிருந்து விடுதலை அடைய என்ன வழி என்று அம்முனிவரிடம் கேட்டு வாருங்கள்' என வேண்டிக்கொண்டது.

மறுநாள் காலையில் அம்முதியவர், ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த முனிவரிடம் கிளியின் வேண்டுகோளைத் தெரிவித்தார். அதைக் கேட்டவுடன் முனிவர் மயக்கமடைந்து நிலை தடுமாறி விழுந்து இறந்தவர் போல் ஆகிவிட்டார்.

அன்று மாலை அம்முதியவர் அக்கிளியைப் பார்த்து, 'உன்னுடைய வேண்டுகோளை முனிவரிடம் சொன்னவுடன் அவர் மயங்கி கீழே விழுந்து இறந்துவிட்டார்' என்றார். அதைக் கேட்டதும் அக்கிளியும் கூண்டுக்குள்ளேயே மயங்கி விழுந்து இறந்துவிட்டது. இதனைக் கண்ட அப்பெரியவர், இனி இந்த துரதிர்ஷ்டமான கிளியை வைத்திருப்பது நல்லதல்ல என்று எண்ணி அதை வெளியே எடுத்து புதைப்பதற்காக கூண்டைத் திறந்தார். கூண்டைத் திறந்ததுதான் தாமதம், உடனே கிளி அக்கூண்டைவிட்டுப் பறந்தோடியது.

வாழும்போதே சாகத் தெரிந்தவன்தான் அதாவது, நான் எனது என்கிற இம்மாயப் பற்றிலிருந்து விடுபட்டவன்தான் பூரண சுதந்தரத்தை அடைவான்.

யான்எனது என்னும் செருக்கு அறுப்பான்
வானோர்க்குஉயர்ந்த உலகம் புகும். – துறவு 346

தனியாக வேட்டையாடுவதை விருப்பமாகக் கொண்ட அரசன் ஒருவன் வழிதவறி காட்டிற்குள் வெகுதூரம் சென்றுவிட்டான். காட்டில் முனிவர் ஒருவர் குடில் அமைத்து தங்கி இருப்பதைக் கண்டு அன்று இரவுப்பொழுதை அங்கே கழிக்கலாம் என்று முனிவரிடம் தங்க அனுமதி கேட்டான். முனிவரும் தாராளமாக தங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

முனிவரும் அரசரும் அந்தச் சிறிய குடிலில் தூங்க ஆரம்பித்தனர். இரவு முழுவதும் முப்பது நாற்பது நாய்கள் அந்தக் குடிலைச் சுற்றி குரைத்துக் கொண்டே இருந்தன. எனவே, அரசனால் தூங்கவே முடியவில்லை. அவர், அன்று நாள் முழுவதும் காட்டில் திரிந்து களைத்து இருந்தார். ஆனால், நாய்களோ வெறித்தனமாக குரைத்து இரவின் அமைதியைக் கெடுத்தன. இத்தனைக்கும் மத்தியில் முனிவர் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார்.

அவரை எழுப்பிய அரசர், ‘என்ன மனிதர் நீங்கள்? இவ்வளவு சத்தத்திற்கு மத்தியில் உங்களால் எப்படி உறங்க முடிகிறது?’ என்று புலம்பினான்.

முனிவரோ நிதானத்துடன், ‘அந்த நாய்கள் உங்களுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ இங்கு கூடவில்லை; கோஷமிடவில்லை. அந்த நாய்களுக்கு இங்கு ஒரு அரசர் தங்கி இருப்பதும் தெரியாது. அவைகளுக்கு அறிவு கிடையாது. அந்த நாய்களுக்கும் உங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவை தங்களுக்கே உரிய குரைக்கும் வேலையைப் பார்க்கின்றன. நீங்கள் தூங்கும் வேலையைப் பாருங்கள்’ என்றார்.

‘நாய்கள் இப்படி ஓயாமல் குரைத்தால் நான் எப்படி தூங்க முடியும்?’ என்றான் அரசன். உடனே முனிவர், ‘நீங்கள் அவை குரைப்பதை எதிர்த்துப் போராடுகிறீர்கள். அப்படிப் போராடாதீர்கள். பிரச்சனை குரைப்பொலி அல்ல. உங்கள் எதிர்ப்பு உணர்வுதான். இந்த நாய்கள் குரைப்பதை நிறுத்தினால்தான் தூங்க முடியும் என்று ஒரு நிபந்தனையை ஏற்படுத்திவிட்டீர்கள். நாய்கள் உங்களது நிபந்தனையைக் கவனிக்கப் போவது இல்லை. நீங்களும் உங்கள் நிபந்தனையை விலக்கப்போவது இல்லை. ஆனால், நிபந்தனையை விலக்கினால் மட்டுமே நிம்மதி பெற முடியும். நடைமுறைக்கு சாத்தியமானதும் அதுதான். நாய்களின் குரைப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏற்பு உணர்வுடன் கவனித்தால் குரைப்புச் சத்தமும் ஒருவகை மந்திரம்தான்’ என்றார்.

இந்த யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலையோடே தூங்கப் போனான் அரசன். ஆனால் அவன் காலையில் மிகுந்த மகிழ்ச்சியுடன் எழுந்து முனிவரைச் சந்தித்து, 'ஆச்சரியம்தான்! எனது எதிர்ப்பு உணர்வை விலக்கிக் கொண்டு நாய்கள் குரைப்பதைக் கவனித்தேன். ஆழ்ந்து ரசிக்கவும் தொடங்கினேன். அப்படியே உறங்கிப் போனேன்' என்றான்.

"ஒருமை என்பது தனது அறிவு, ஒழுக்கம் ஒத்த இடத்தில் தானே கூடும். மற்ற இடத்தில் தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்பது." – வள்ளலார்.

திருச்சிற்றம்பலம்

# உள்ளது உரைத்தல்

## மழை



புகையின் மூன்றாவது கலையின் சீதளசக்தியினால் மழையுண்டாகின்றது. இதுபோல் சூரியகிரண உஷ்ண ஆவியாகிய புகை ஒஷதிகளிலும் நீரிலும் பாரிலும் பொருப்பிலுமுள்ள திரவசக்தியைக் கிரகித்து, வாயுமண்டலத்தில் சேர்த்து, மேலுங்கீழும் உஷ்ணம் நிரம்ப, மத்தியிலுள்ள திரவ அணுக்கள் புழுங்கி நீராய், காலபேத வண்ணம் வாயுவால் பிரேரிக்கப்பட்டு அசைக்கும்போது, கீழு மேலுமுள்ள உஷ்ணவாயு தடிப்பு விலகும்போது, மின்னலாகிய பிரகாசமும், நெருங்கி யொன்றுபடும்போது சத்தமாகிய இடியும், அத்தொனியால் படலம்போல மூடியிருந்த காராகிய மேகம் விலகி வாயுவால் கலங்கிய போது மழையும் உண்டாகும். இதன்றி **மேகம் கடல் ஜலத்தை உண்டு மழைபெய்வ தென்பது பொய்.**

– திருவருட்பா வசனபாகம்

திருச்சிற்றம்பலம்

# மானுடராய் பிறந்த நமக்கு...

உடம்பெடுத்தப் பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண் – ஔவைக் குறள்

*எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா! என்ற பாரதியாரின் இந்தக் கவிதை வரிகள் படிக்கின்ற ஒவ்வொருவரின் சிந்தனையையும் தூண்டுகின்றதல்லவா. எவ்வளவு உள்ளர்த்தமான வார்த்தைகள் இவை. இந்த வார்த்தையின் பொருளை எத்தனை மனிதர்களால் உணர்ந்துகொள்ள முடியும்.*

*இதனைக் குறித்து செல்வந்தர்கள், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் ஏழைகள் போன்ற சமுதாயத்தினரிடம் கேட்டால் கேட்டவரிடத்தில் சலிப்பு கொள்வார்களேயன்றி புன்முறுவலுடன் ஒருவராலும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதே உண்மை. ஏனெனில், எதிர்பார்ப்புகளைக் கொண்ட மனித சமுதாயம் வேகமான இயந்திரமயமான வாழ்க்கையை வாழ்வதால் யாரும்* இத்தகைய உள்ளார்ந்த மெய்யின்பத்தைப் *பற்றி ஆய்ந்து அறிந்து அனுபவிக்க முயலுவதில்லை.*

*கான மயிலாட கண்ட வான்கோழிபோல் ஒருவரைப் பார்த்து ஒருவர் பொறாமை கொண்டு பிறர்போல் வாழவேண்டும் என ஆசைப்பட்டு பிச்சுலகர் மெச்சுவதற்காக ஆடம்பர வாழ்வு வாழ்ந்து பின் வருவாய் போதாமல் கடன்பட்டு துன்பத்திற்கு ஆளாகி வருந்தும் நிலை ஏற்படுகின்றதேயன்றி மெய்யின்பத்தை உணர நமக்கு நாமே கால அவகாசம் கொடுத்துக் கொள்வதில்லை.*

வருந்தி அழைத்தாலும் வாராதது வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா – இருந்து ஏங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில் *என்ற ஔவையின் இந்நல்வழி பாடலின்படி இன்றைய காலகட்டத்தில் ஏங்கி இளைத்து நெஞ்சம் புண்ணாகித் துயரப்படுவோரின் எண்ணிக்கையே அதிகமாகியுள்ளது. நாம் உழைத்து சம்பாதித்த பணத்தில் துன்பத்தையே விலைகொடுத்து வாங்குகின்றோம் என்பதே தெரியாமல் வாழ்கின்றோம்.*

*இவ்வாறே பணக்காரன், நடுத்தர வர்க்கம், ஏழை என்ற எந்த பாகுபாடுமின்றி எல்லோருமே துன்பத்தில் தவிப்பது வியப்பைத்தான் ஏற்படுத்துகின்றது. இத்தகையோரை பித்துலகீரே என பின்வரும் 'உலகர்க்கு உய்வகை கூறல்' எனும் தலைப்பின் கீழ்வரும் பாடலில் சாடுகின்றார் நம் பெருமானார்.*

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
  கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
  பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலம் காண்கின்றீர்
  குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே இரண்டு சேர்த்து எண்ணவும் அறியீர்
  எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

*உலகியல் பித்துக் கொண்ட பெருமக்களே! தங்களது இனத்தவருடன் கூடி விருப்பமான உடைகள் மற்றும் பொன் ஆபரணங்களை அணிந்து தற்செருக்குற்று தன்னிடம் பசியினால் யாசிப்பவரை பார்க்காது தயவின்றி வாழ்கின்றீர். நற்குணத்தோடும் நற்கருத்துக்களோடும் பெரியோர்கள் குறித்துரைப்பதை கேட்காமல் கொண்டாட்டமான பொய் வாழ்வையே வாழ விரும்புகின்றீர். இதனால், கடவுள் மீது பற்று கொண்டு எண்ணவும் அறியவும் மறுக்கின்றீர். நீங்கள் எதனைத் துணையாகக் கொண்டு வாழ்வில் நற்கதியடையப் போகின்றீர்? என்று உரைக்கின்றார்.*

மானம் சிறிதென்று எண்ணி, வாழ்வு பெரிதென்று எண்ணும் ஈனர்களுக்கு உலகந்தனில் கிளியே! இருக்க நிலைமை உண்டோ! *என்று சாடுகின்றார் பாரதியார்.*

பொய்கட்டிக் கொண்டுநீர் வாழ்கின்றீர் இங்கே
  புலைகட்டிக் கொண்ட இப்பொய்யுடல் வீழ்ந்தால்
செய்கட்டி வாழ்கின்ற செருக்கற்று நரகில்
  சிறுபுழுவாகித் திகைத்திடல் அறியீர்
கைகட்டி வாய்பொத்தி நிற்பாரைக் கண்டே
  கைகொட்டிச் சிரிக்கின்றீர் கருணை ஒன்றில்லீர்
எய்கட்டி இடைமொய்க்கும் ஈயினும் சிறியீர்
  எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

*உலக வாழ்வில் பித்து கொண்டு அலைகின்ற மக்களே! பொய்மையாகிய நெறியை மேற்கொண்டு இவ்வுலகில் வாழ்கின்றீர்கள்,*

*ஆனால், வயல் சிறிதாயினும் அதனை வரம்பு கட்டி உழுது பயிர் செய்யும் உழவனது பெருமிதத்தை போன்று புலால் நாற்றம் நாறுகின்ற பொய்யான இவ்வுடம்பு வீழ்ந்தொழிந்தால் நரகத்தில் சிறுபுழுவைப் போல் மயங்கி வருந்த வேண்டிவரும் என்பதை அறியாது 'யான் எனது' என்று செருக்கு கொண்டு திரிகின்றீர்கள். கை கட்டிக் கொண்டும் வாய் மூடிக் கொண்டும் வணங்கி நிற்பவர்களைக் காணில் அவர்களை இகழ்ந்து இரக்கமின்றி சிரிக்கின்றீர்கள். உடலில் உண்டாகிய புண்ணாகிய கட்டியை மொய்க்கும் சிறு ஈக்களினும் அற்பராகிய நீர் இறுதி காலத்தில் எதனைத் துணையாகக் கொள்வீர்.*

*ஆக, ஒருபுறம் மனிதன் சுயநல வாழ்விலிருந்து விடுபடவேண்டும், மற்றொருபுறம் அவன் சோம்பேறியான வாழ்விலிருந்து வெளிவர வேண்டும். அவ்வாறு இல்லாது சுயநலச் சேற்றிலே உழன்று கொண்டிருப்பவர், உலகியற் பொய் வாழ்க்கையில் ஆசை மிகுந்து அலைந்து, செய்யக்கூடாத தீமைகளெல்லாம் செய்து, சொல்லத் தகாத வன்மொழிகளைச் சொல்லி, சேரத்தகாத தீயோருடன் சேர்ந்து, மேற்கொள்ளத் தகாத நட வடிக்கைகளை மேற்கொண்டு, அன்றியும் கண்போலக் காக்கின்ற இறைவனை நினைந்து கண்களில் ஆனந்த நீர் சொறிந்து வழிபடாது மாள்வர். இத்தகையோரின் வாழ்வு முறையை நம் பெருமானார் திருவருட்பாவில் தனித்திரு அலங்கல் எனும் தலைப்பின்கீழ் வரும் பாடலொன்றில் தெளிவாக விளக்கியுள்ளார்.*

உணிக்கும் மூட்டுக்கும் கொதுகுக்கும்
  பேனுக்கும் உவப்புறப் பசிக்கின்றீர்,
துணிக்கும் காசுக்கும் சோற்றுக்கும்
  ஊர்தொறும் சுற்றிப்போய் அலைகின்றீர்,
பிணிக்கும் பீடைக்கும் உடல்உளம்
  கொடுக்கின்றீர் பேதையீர், நல்லோர்கள்
பணிக்கும் வேலை செய்து உண்டு உடுத்து
  அம்பலம் பரவுதற்கு இசையீரே.

*உலகத்தவரே! நற்பண்புடைய பெரியோர்கள் அன்புடனே இடுகின்ற வேலைகளைச் செய்தும், உண்பன உண்டும், உடுப்பன உடுத்தியும், இறைவன் ஆடுகின்ற அம்பலத்தை அடைந்து அப்பெருமானை வழிபடுதற்கு விரும்பாமல் உண்ணிக்கும், மூட்டைப் பூச்சிக்கும், கொசுக்களுக்கும், பேனுக்கும் மகிழ்ச்சி உண்டாகப் பசித்து உண்டு, உடுக்கும் துணிக்கும், காசுக்கும்,*

சோற்றுக்கும் ஆசையுற்று ஊர்தோறும் சுற்றிப்போய் அலைந்து வருந்துகின்றீர்கள்; அன்றியும் நோய்க்கும் துன்பத்திற்கும் உடம்பையும் உள்ளத்தையும் பறிகொடுத்து வருந்துகின்றீர்கள் என்றால் நீங்கள் அறிவற்றவர்கள் அல்லவா? என்று நம்மை வினவுகின்றார்.

அணுத்துணையும் சினம் காமம் அடையாமை வேண்டும் என்ற அருட்பா வரியில் சினம் காமம் என்ற இரண்டையும் ஒன்றாய் அமைத்து இவை அணுவளவும் நம்மை அடையக்கூடாது என்று விண்ணப்பித்தற்கு காரணம் என்ன? சினம் உண்டாவதற்குக் காரணமே காமமாகிய விருப்புதான். ஒருவன் ஒன்றன் மீது அதிக விருப்பு கொண்டு வாழும் நிலையில் அதனை அடைய முடியாது போனாலும் அல்லது அது கிடைத்து தன்னை விட்டு நீங்கினால் அதற்குக் காரணமான சூழ்நிலையின் மீதோ, நபர் மீதோ, ஏன் தன்மீது கூட மன அழுத்தத்தின் காரணமாக கோபம் உண்டாகும். எனவேதான் இவ்வாறு அமைந்துள்ளது இவ்வரி.

இவ்விதம் உலகில் வாழும் மனிதர்கள் பற்றின் காரணமாக தீராத கோபத்தை அடைந்து வஞ்சகம் கொண்டு புத்தி தடுமாறி நல்ல வழித் துறைகளைப் பாராது பழி உண்டாகும் நெறியிலே நின்று அதனால் தனக்கு துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும் அதைக் கண்டு அஞ்சாமலும் மனம் போன போக்கில் தடையின்றி சென்று மயங்குற்று திகைக்கின்றனர். மாந்தர்களின் இந்நிலையினை நம் வள்ளல் பெருமானார் பின்வரும் திருவருட்பாவில் தெள்ளத் தெளிவாக அருளியுள்ளார்கள்.

ஆறாமல் அவியாமல் அடைந்த கோபத்தீர்
அடர்வுற உலகிடை அஞ்சாது திரிவீர்
மாறாமல் மனஞ்சென்ற வழிசென்று திகைப்பீர்
வழிதுறை காண்கிலீர் பழிபடும் படிக்கே
நாறாத மலர்போலும் வாழ்கின்றீர் மூப்பு
நரைதிரை மரணத்துக்கு என்செயக் கடவீர்
ஏறாமல் வீணிலே இறங்குகின்றீரே
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

இவ்விதம் வாழ்வதால் நாம் உண்மையில் அறிந்து கொள்ள வேண்டியவற்றை அறியாமல் வீண்காலம் கழித்துக் கொண்டிருப்பதை பின்வரும் அருட்பா பாடலில் நம் பெருமானார் எடுத்து இயம்புகின்றார்கள்.

அச்சையும் உடம்பையும் அறிவகை அறியீர்
அம்மையும் அப்பனும் ஆர்எனத் தெரியீர்
பச்சையும் செம்மையும் கருமையும் கூடிப்
பலித்தநும் வாழ்க்கையில் பண்பொன்றும் இல்லீர்
பிச்சையிட்டு உண்ணவும் பின்படுகின்றீர்
பின்படு தீமையின் முன்படுகின்றீர்
இச்சையில் கண்மூடி எச்சுகம் கண்டீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

*உலக வாழ்க்கையில் ஆசையுற்று அலைகின்ற மக்களே! உயிரையும் உடம்பையும் அறியாது உள்ளீர்கள். உங்களுக்கு உண்மையான தாய் யார்? தந்தை யார்? எனத் தெரியாது உள்ளீர்கள். இன்பமும் துன்பமும் கலந்துள்ள உம்முடைய வாழ்வின் பண்பு ஒன்றும் அறியாது இருக்கின்றீர்கள். இல்லாதவர்க்கு பிச்சையிட்டு உண்ண பின்வாங்குகின்றீர் தீமைகள் செய்து துன்பப்படுவதற்கு முந்திக்கொண்டு முன் வந்து நிற்கின்றீர். உலக இச்சையில் கண்மூடிக் கொண்டு சென்று என்ன சுகத்தைக் கண்டீர். இனி எய்துதற்குரிய இன்ப வாழ்வுக்கு எதனைத் துணை கொண்டுள்ளீர் என நமக்கு அறிவுறுத்துகின்றார்.*

*இவற்றால் நாம் தெரிந்து தெளிய வேண்டுவது என்னவெனில், 36 தத்துவங்களையும் அவற்றின் செயல்களையும் தெரிவிக்கும் தத்துவ ஞானத்தை அறிந்து, தத்துவங்கள் அறிவில்லாதவை என ஆராய்ந்து அவற்றை நீக்கி, அவற்றின் முடிவில் தன்னையறிந்து ஆன்மாக்களாகிய நாம் எக்காலத்தும் உள்ளதாய் விளங்கப்பட்டது; அது தோன்றுதலும் அழிதலும் இல்லை; அதை ஆக்கவும் அழிக்கவும் முடியாது என்ற தன்னுண்மையை உணர்வதோடு, இறைவனே எல்லாவற்றிற்கும் ஆதாரமானவன்; அவன் என்றும் மாறாத் தன்மையுடன் மெய்யறிவு இன்ப வடிவாகி எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன்; தத்துவங்களைக் கடந்தவன்; நமக்கு என்றும் மாறாத உறவாய் விளங்குபவன் என்பதையும் நன்குணர்ந்து இவ்வுடல் என்கிற விளை நிலைத்தில் பத்தி என்கிற வித்தினை விதைத்து, தன்னுயிர்போல் மன்னுயிர்களை நேசிக்கும் கைம்மாறு கருதா அன்பு நீர் பாய்ச்சி, தீவினைகளாகிய களைகளைக் களைந்து, வாய்மை, தூய்மை என்கிற உரத்தைப் இட்டு, மெய்த்துறவு என்கிற வேலி அமைத்து, மெய்ஞ்ஞானம் என்னும் பயிரை விளைவித்து முத்தியாகிய வீடுபேற்றினை அறுவடை செய்ய வேண்டும்.*

*திருச்சிற்றம்பலம்*

# வெற்றியின் ரகசியம்



மாலை மூன்று மணிக்கு சந்திப்பதாக முன் கூட்டியே ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. ஏற்கனவே மூன்று இருபது ஆகிவிட்டிருந்தது. ராகவ் ஏகப்பட்ட தயக்கத்துடன் ''மன்னித்துவிடுங்கள்!'' என்று எச்சரிக்கையாகக் கூறியவாறு சாரதியின் அலுவலகத்திற்குள் நுழைந்தார்.

தவறுகள் ஒரு மனிதனைக் காயப்படுத்தும்போதுதான் அவை அவனை மாற்றுகின்றன. எனவே, மன்னிக்கவும் என்று ஒருவரிடம் இருந்து வருவதைச் சில நேரங்களில் நாம் அமைதியாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அவர் மன்னிக்கவும் என்று கூறும்போது, ‘அதனாலென்ன, பரவாயில்லை’ என்று நீங்கள் கூறினால், தான் செய்த தவறை உணர்வதற்கான அந்த சந்தர்ப்பத்தை நீங்கள் அவருக்கு வழங்குவதில்லை. அப்போது மக்கள் தங்கள் தவறுகளைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பர்.

“தாமதமாக வந்தது சரியல்ல” என்ற செய்தியை சாரதியின் முகபாவங்கள் ராகவிற்கு உணர்த்தின. ஆனாலும், சந்திப்புத் தொடர்ந்தது. சந்திப்பின் இறுதியில், “உங்களுக்கு சிறிது நேரம் இருந்தால் எனக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த முடியுமா? உங்களுடன் பழக ஆரம்பித்ததில் இருந்து இந்தக் கேள்வி என் மனத்திற்குள் வட்டமிட்டுக் கொண்டே இருக்கிறது” என்று ராகவ் கூறினார்.

“நேரம் தவறாமைக்கு நீங்கள் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? இதுதானே உங்கள் கேள்வி” என்று சாரதி இடைமறித்தார். ராகவ் புன்னகைத்துத் தலையாட்டி சாரதியின் பதிலுக்காகக் காத்திருந்தார்.

சாரதி தன் இடத்தைவிட்டு எழுந்து வந்து ராகவின் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். “ராகவ், பிறப்பின் சிறப்பு நாம் அனைவரும் சமமாகப் பிறந்துள்ளதில் அடங்கியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் ஒரே மாதிரியான உறுப்புகளால்தான் உருவாக்கபட்டு இருக்கிறான். ஒரு மனிதனுக்கு எதுவெல்லாம் சாத்தியமோ, அனைவருக்கும் அது சாத்தியம்.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரே மாதிரியான விஷயங்கள்தான் இருக்கின்றனவென்றால், விளைவுகளில் ஏன் இத்தனை வேறுபாடுகள் உள்ளன? ஒரு மனிதனால் ஏராளமானவற்றைப் படைக்க முடிகிறது, மற்றவர்களால் அது முடியவில்லை. பெரும்பான்மையான மக்கள் அதிகபட்ச முயற்சியைக் கொண்டு குறைந்தபட்ச விளைவுகளையே உருவாக்குவதும், மீதியுள்ளோர் குறைந்தபட்ச முயற்சியைக் கொண்டு அதிகபட்ச விளைவுகளைப் பெறுவதும் ஏன்? இதற்கு அறிவுப்பூர்வமான ஒரு விளக்கம் இருக்கிறது” என்று சாரதி விளக்கத் தொடங்கினார்.

சாரதி தொடர்ந்து அளிக்கவிருந்த விளக்கத்தைக் கேட்க ராகவ் ஆர்வத்துடிப்புடனும் கவனமாகவும் காத்திருந்தார். “நீங்கள் என்னை மூன்று மணிக்கு சந்திப்பதாகக் கூறியிருந்தீர்கள். ஆனால், மூன்று இருபதுக்கு வந்தீர்கள். யதார்த்தத்தில், நாம் இருவரும் இங்கு நுண்தொழில்நுட்பத்தையோ ராக்கெட் அறிவியலையோ கையாண்டு கொண்டிருக்கவில்லை. எனவே, ஓர் இருபது நிமிடங்கள் அப்படியொன்றும் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தப் போவதில்லை. ஆனால், **வெளிப்படையாகத் தெரியக்கூடியதையும் தாண்டி ஏதோ ஒன்று நிகழ்கிறது**. ‘மன்னிக்கவும்’ என்ற உங்களது வார்த்தையும், அதை நான் ஏற்றுக் கொள்வதும் விழிப்புணர்வு நிலையில் எல்லாவற்றையும் சரியாக்கிவிடுகின்றது. ஆனால், அதிக ஆழமான ஒரு நிலையில் உங்கள் ஆழ்மனம் இந்த அனுபவத்தைக் குறித்து வைத்திருக்கிறது. அதேபோல் என் ஆழ்மனமும் இதைக் குறித்து வைத்துள்ளது. ‘ராகவ் மூன்று மணி என்று கூறினால், அது மூன்று மணியல்ல.’ உங்கள் விஷயத்தில் இதுவொரு விதிவிலக்கான நிகழ்வல்ல. மாறாக, அது மீண்டும் மிண்டும் தொடர்ந்து நடைபெறும் ஒரு நிகழ்வுதான். இன்று இந்த சந்திப்பில் நீங்கள், ‘நான் இந்தப் பணித்திட்டத்தைப் பதினைந்து நாட்களில் செய்து முடிப்பேன்’ என்று கூறினீர்கள் அல்லவா? நான் உங்களுக்கு ஒரு விஷயத்தை வெளிப்படையாகக் கூற விரும்புகிறேன். நீங்கள் பதினைந்து நாட்களில் இதை செய்து முடிப்பீர்கள் என்று உள்ளூர நான் நம்பவில்லை. உங்கள் விளக்கங்களையும், பதினைந்து நாட்கள் என்று நீங்கள் கணித்து வைத்திருப்பதற்குப் பின்னால் உள்ள அறிவுப்பூர்வமான காரணத்தையும் என் வெளிமனத்தால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், என் ஆழ்மனம் உங்கள் அர்ப்பணிப்பை நம்ப மறுக்கிறது. நீங்கள் கூறுவது ஒன்று, செய்வது வேறொன்று என்பது கடந்தகால அனுபவங்களில் இருந்து பதிவு

செய்யப்பட்டுள்ளது. மூன்று மணி என்பது ஒருபோதும் மூன்று மணியாக இல்லாமல் இருந்து வந்துள்ளபோது, பதினைந்து நாட்கள் மட்டும் பதினைந்து நாட்களாக இருக்கும் என்று எப்படி என்னால் நம்ப முடியும்?" என்று விளக்கினார்.

குளிரூட்டப்பட்டிருந்த ஓர் அறையில் சௌகரிமாக அமர்ந்திருந்த போதும், ராகவின் நெற்றியில் வியர்வை முத்துக்கள் அரும்பத் துவங்கியிருந்தன. அவர் இப்போது அசௌகரியமாக உணரத் துவங்கினார். சாரதி தன்னைப் பற்றித்தான் விளக்கிக் கொண்டிருந்தார், அதுவும் ஓர் எதிர்மறையான போக்கில் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

சாரதி மேலும் விவரித்தார். "உங்கள் மனைவியின்மீது நீங்கள் கொண்டிருக்கும் நேசத்தில் உங்கள் மனைவிக்கு முழுமையான நம்பிக்கை இல்லை என்று நீங்கள் அடிக்கடி என்னிடம் குறைகூறி வந்துள்ளீர்கள் அல்லவா? அதுவும் இதே காரணத்தால்தான். கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் உங்கள் நிலையைப் பொறுத்தவரை தாழ்ந்த நிலையை விட மிகத் தாழ்ந்த நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதோடு, இதுவும் எப்போதாவது நிகழும் ஒரு விஷயமல்ல. விழிப்புணர்வு நிலையில், உங்கள் மனைவிக்கு உங்களிடம் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால், நீங்கள் உங்கள் மனைவியை நேசிப்பதாகக் கூறுவதை அவரது ஆழ்மனம் நம்ப மறுக்கிறது. ஏனெனில், 'செவ்வாய்க் கிழமைகள் ஒருபோதும் செவ்வாய்க் கிழமைகளாக இருந்ததில்லை, ஐந்து மணி ஒருபோதும் ஐந்து மணியாக இருந்ததில்லை எனும்போது நீங்கள் கூறும் உண்மையிலேயே நேசிக்கிறீர்கள் என்று என்னால் எப்படி நம்ப முடியும்?' என்று அது வியக்கிறது. உங்கள் மனைவியின் ஆழ்மனம் அவருக்கு அது பற்றிய எந்த விழிப்புணர்வும் இல்லாமலேயே காலப்போக்கில் உங்கள் வார்த்தைகள்மீது மதிப்பிழந்துவிடுகிறது. அதனால்தான், உங்கள் மகன் உங்கள் சகோதரரின் பேச்சைக் கேட்கிறான், ஆனால், உங்கள் பேச்சைக் கேட்பதில்லை என்பதை நீங்கள் கவனித்திருக்கக்கூடும். நீங்களும் உங்கள் சகோதரரும் உங்கள் சொந்த மகன்களிடம் தொடர்ந்து உங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறியுள்ளீர்கள். ஆனால், நீங்கள் உங்கள் சகோதரரின் மகனிடமும், உங்கள் சகோதரர் உங்கள் மகனிடமும் கூடுதலாக நல்லவிதமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள். நாம் அனைவருமே பகுதிநேரம் நல்லவிதமாக நடந்து கொள்ளும் திறன் பெற்றிருக்கிறோம்.

ஆனால், முழுநேரமும் நாம் நல்லவிதமாக நடந்து கொள்ள வேண்டும் என்று நம்மிடம் எதிர்பார்க்கப்படும்போது அது நமக்குக் கடினமாக இருக்கிறது. நம் குழந்தைகளிடம் கொடுத்த வாக்குறுதிகளை நாம் காப்பாற்றாமல் போவதன் மூலம் அவர்களது ஆழ்மனம் நம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை நாம் இழந்துவிடுகிறோம்.

குறிப்பாக நாம் தொடர்ந்து நம் வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறும்போது அவர்களுக்கு நம்மீதுள்ள மதிப்பு குறையாமல் இருக்கக்கூடும். ஆனால், நம் வார்த்தைகள் மீது அவர்களுக்கு இருக்கும் மதிப்பை நாம் நிச்சயமாகத் தொலைத்துவிடுவோம்.''

சாரதி தொடர்ந்து பேசினார். ''ராகவ், ஒவ்வொரு முறை நீங்கள் வாக்குத் தவறும்போதும் அடுத்தவருடைய ஆழ்மனத்தில் நீங்கள் ஒரு சந்தேகத்தை உருவாக்குகிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு வாக்குறுதி தகர்க்கப்படும்போதும் அந்த ஆழ்மன சந்தேகம் உருவாக்கப்படுகிறது. மனித மனத்தின் பெரும் பகுதி ஆழ்மனமாகவும், ஒரு சிறு பகுதி வெளிமனமாகவும் இருப்பதால் விழிப்புணர்வு நிலையில் எல்லாமே சரியாக இருப்பதாகத் தோன்றினாலும் ஆழ்மனத்தில் சந்தேகம் இருப்பவர்களின் உறவுகள் ஒருபோதும் ஆழமான உறவுகளாக உருவாகாது. அவை மேலோட்டமான உறவுகளாகவே இருக்கும்.''

சாரதி மேலும் தொடர்ந்தார். ''பிரச்சனை நீங்கள் நினைப்பதைவிட அதிகச் சிக்கலானது. துவக்கத்தில் நேரம் தவறாமையைக் கடைபிடிக்காமல் இருப்பதும் வாக்குறுதிகளை நிறைவற்றத் தவறுவதும் மற்றவர்களின் ஆழ்மனத்தின் சந்தேகங்களை விதைத்து உங்கள் உறவுகளைப் பாதிக்கின்ன. பிறகு உங்களது ஆழ்மனம் அந்த சந்தேகங்களை உருவாக்குகிறது. அவ்வாறு நிகழும்போது அது உங்கள் வாழ்க்கையையே பாதிக்கிறது. வாழ்க்கையில் ஒரு பெரிய விஷயத்தைச் சாதிக்க நீங்கள் விரும்பும் ஒவ்வொரு முறையும், ஏதோ ஒரு மகத்தான செயலைச் செய்ய நீங்கள் கனவு காணும் ஒவ்வொரு முறையும் நீங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறியதால் உங்களது ஆழ்மனத்தில் நீங்கள் உருவாக்கி வைத்துள்ள சந்தேகங்களின் காரணமாக உங்கள் சொந்த ஆழ்மனமே உங்கள் அற்றலுக்குத் துரோகம் இழைக்கும். 'காலையில் கண்விழிப்பதற்காக நீங்கள் வைத்துள்ள அலாரத்திற்குக்கூட உங்களால் கண்விழிக்க முடியவில்லை. நீங்கள் தொலைபேசியில் திரும்ப அழைப்பதாகக் கொடுத்த வாக்குறுதியைக் கூட உங்களால் காப்பாற்ற முடியவில்லை.

*குறித்த நேரத்தில் கொடுப்பதாக நீங்கள் வாக்களித்த ஆவணங்களை உங்களால் கொடுக்க முடியவில்லை, குறித்த நேரத்தில் ஒரு சந்திப்பிற்குக் கூட உங்களால் வர முடியவில்லை' எனும்போது நீங்கள் ஒரு மகத்தானவனாக எவ்வாறு உருவாவது? உங்களால் சாதிக்க முடியும் விஷயங்களைப் பற்றி மற்றவர்கள் கொண்டிருக்கும் சந்தேகங்கள் அல்ல இவை.*

*மாறாக, இவையனைத்தும் உங்கள் சொந்த ஆழ்மனம் உங்களைப் பற்றி கொண்டிருக்கும் சந்தேகங்கள்தான். இவ்வாறுதான் உங்கள் சொந்த ஆழ்மனம் அதில் ஏற்கனவே உருவாக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆழ்மன சந்தேகங்களின் காரணமாக உங்கள் ஆற்றலுக்குத் துரோகம் இழைக்கிறது."*

*ராகவ் முற்றிலும் நிலைகுலைந்தவராகத் தோற்றமளித்தார்.* **"எதுவும் தொலைந்து போகவில்லை. ஆழ்மனத்தில் நம்பிக்கைகளை உருவாக்குவதன் மூலம் எல்லாவற்றையும் மாற்றிவிடலாம்"** *என்று சாரதி அவரைத் தேற்றினார்.* **"குறித்த நேரத்தில் செய்வதாக ஒப்புக் கொண்ட ஒரு செயலை அந்நேரத்தில் செய்வதும், எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதும் உங்கள் ஆழ்மனத்தில் நம்பிக்கைகளை உருவாக்கி உங்கள் ஆற்றலை வெளிப்படுத்த உதவும். அதோடு, இறுதியில் அடுத்தவர்களின் ஆழ்மனத்தில் நம்பிக்கைகளை உருவாக்கி ஆழமான உறவுகளை உருவாக்க உங்களுக்கு உதவும்.**

*எனவே ராகவ், நான் நேரத்தைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. நேரம் தவறாமையைப் பயிற்சி செய்வது ஆழ்மன நம்பிக்கைகளை உருவாக்குவதற்கான சாதனங்களில் ஒன்று. ஒரு சாதாரணமான பின்புலத்தையும் எளிமையான கடந்த காலத்தையும் கொண்ட என்னால் இப்போது நான் அடைந்திருக்கும் நிலையை அடைய முடிந்திருக்கிறது என்றால் நான் கடைபிடித்து வரும் நேரம் தவறாமையும் வாக்குத் தவறாமையும்தான் அதற்குக் காரணம்.*

*கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது ஆழ்மன நம்பிக்கைகளை உருவாக்குவதற்கான ஓர் அற்புதமான சாதனம். நீங்கள் எவ்வளவு கற்றறிந்தவர் அல்லது நீங்கள் எவ்வளவு அறிவார்ந்தவர் என்பதைப் பற்றியது அல்ல இது. மாறாக, உங்கள் ஆழ்மனம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைப் பற்றியதுதான் இது. உங்கள் ஆழ்மன நம்பிக்கைகளைக் கொண்டு உங்கள் ஆழ்மனம் உங்களுக்கு ஆதரவாகச் செயல்பகிறது.*

உங்கள் ஆழ்மன சந்தேகங்களைக் கொண்டு உங்கள் ஆழ்மனம் உங்களுக்கு எதிராகச் செயல்படுகின்றது. அதனால்தான், ஒவ்வொரு மனிதனின் உந்துசக்தியும் அவன்தான், அவனது சொந்தத் தடையும் அவனேதான்'' என்று சாரதி தெளிவுபடுத்தினார்.

ராகவின் தோள்களைக் கனிவாகத் தொட்டு, “மாபெரும் பெருமிதம் உங்கள் கண் முன்னாலேயே நீங்கள் வளர்வதுதான்! உங்களது வார்த்தையைக் காப்பாற்றும் ஒவ்வொரு முறையும் நீங்கள் உங்கள் கண் முன்னால் வளர்கிறீர்கள். அதன் மூலம் ஆழ்மன நம்பிக்கைகளை உருவாக்குகிறீர்கள். உங்கள் கண்களுக்கு முன்னால் வீழ்வதுதான் மிக மோசமான பின்னடைவு. உங்கள் வார்த்தைக்கு நீங்கள் தகுதியற்றவராகப் போகும் ஒவ்வொரு முறையும் உங்கள் கண்களுக்கு முன்னால் நீங்கள் தோற்றுப் போகிறீர்கள். அதன்மூலம் ஆழ்மன சந்தேகங்களை வளர்க்கிறீர்கள். தனிப்பட்ட வாக்குறுதிகளில் துவங்குங்கள். அதை நிறைவேற்றப் பழகிய பிறகு மற்றவர்களுக்கு நீங்கள் வாக்குறுதி அளிக்கத் துவங்கலாம்” என்று சாரதி கூறினார்.

“அவன் சொன்னால் சொன்னபடி செய்வான்” என்று புரிந்து கொள்வதற்கு உங்கள் ஆழ்மனம் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ‘அவன் கனவு கண்டால் அதை நிச்சயம் சாதிப்பான்’ என்று அது நம்பத் துவங்கும்” என்று சாரதி கூறி முடித்தார்.

சாரதி ஒரு காகிதத்தை எடுத்து, “ஒரு மனிதனின் சக்தி அவனது மனத்தில் இருக்கிறது. அவனது மனத்தின் சக்தி அவனது ஆழ்மனத்தில் இருக்கிறது. அவனது ஆழ்மனத்தின் சக்தி அவனது ஆழ்மன நம்பிக்கைகளில் இருக்கிறது. இந்த ஆழ்மன நம்பிக்கைகள்தான் ஒரு மனிதனை மகத்தான நிலைக்கு உயர்த்துகின்றன. எல்லாம் நல்லபடியாக நடக்க உங்களுக்கு என் வாழ்த்துக்கள்! உங்களுக்கு இன்னும் அதிகச் சிறப்புகள் கிடைக்க என் வாழ்த்துக்கள்” என்று அதில் எழுதி அந்தக் குறிப்பை ராகவிடம் கொடுத்தார். அதைப் படித்துவிட்டு “பதினைந்து நாட்கள் என்றால் பதினைந்து நாட்கள்தான். நான் மகத்தானவனாக ஆகப் போகிறேன்” என்று பதிலளித்தார் ராகவ்.


திருச்சிற்றம்பலம்

*வடலூரில்*

**மாதப்பூச ஜோதி தரிசனம்**

வருவார் அழைத்து வாடி வடலூர் வடதிசைக்கே
வந்தால் பெறலாம் நல்ல வரமே – திருவருட்பா

**2022**
**மே**
**7**
**சனி**



# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.







## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை மற்றும் கஞ்சி வார்த்தல் (தி.மலை/பழனி) | – ரூ.1000/– |
| காலை சிற்றுண்டி (தினசரி) | – ரூ.3000/– |
| காலை சிற்றுண்டி (இனிப்பு மற்றும் வடையுடன்) | – ரூ.5000/– |
| மதிய உணவு (தினசரி) (தி.மலை/பழனி) | – ரூ.5000/– |
| மதிய உணவு (இனிப்பு மற்றும் வடையுடன் தினசரி) | – ரூ.6,000/– |
| சிறப்பு மதிய உணவு (தி.மலை) | – ரூ.12,000/– |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு நாளைக்கு) | – ரூ.3,000/– |
| அணையா தீபத்திற்கு (Oil) (5 இடங்களுக்கு) – 15 லி | – ரூ.1,900/– |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

HDFC Bank Ltd
A/C Name:
Arutperunjothi Vallalar charitable trust.
A/C NO: 08761450000048
Branch: Thiruvannamalai
A/C Type: CC AC
IFSC code: Hdfc 0000876
Shift Code: HDFCINBBCHE

Axis Bank
A/C Name:
Arutperunjothi Vallalar charitable trust.
A/C NO: 918010100534486
Branch: Thiruvannamalai
IFSC code: UTIB0000799
AXIS BANK LTD

**SCAN AND PAY**
Using any UPI/ Bharat QR/ Banking Apps

BHIM UPI VISA RuPay

ARUTPERUNJOTHI VALLALAR CHARITABLE TRUST
Pay using 90+ Apps including
AXIS PAY G Pay PhonePe freecharge ICICI Bank
PAYZAPP SAMSUNG pay HDFC BANK and more...
Powered by AXIS BANK

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly April 2022, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2020-2022 Posted at Tiruvannamalai on 16th & 17th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/20-22 (Valid upto 31.12.2022)
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## வடலூர் மாதப்பூச ஜோதி தரிசனத்தில்

# சன்மார்க்க ஞானசத்சங்கம்

நாள்: மே 7, 2022 ஞாயிறு நேரம் மாலை 4.30 - 7.00
இடம்: வள்ளலார் வாழ்வியல் திருமண மண்டபம், தருமச்சாலை ரோடு, வடலூர்

மாலை 4.30 - 5.30 திருஅருட்பா உணர்ந்து ஓதுதல்
தயவுதிரு. வடலூர் MS கார்த்திக் ஐயா



மாலை 5.30 - 7.00 ஞானசத்சங்கம்: சத்திய சிறு விண்ணப்பம்
தயவுதிரு.சாது சரவணன் ஐயா





நிகழ்ச்சி ஏற்பாடு: அருள்திரு பாபு சாது
அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை
திருவண்ணாமலை. vallalarmission.org
தொடர்புக்கு +91 98940 10007

நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்களுக்கு மூலிகை கண் மருந்து இலவசமாக போடப்படும்

திரு/திருமதி

TIRUVANNAMALAI - HO - 606601. POSTAGE FEE COLLECTED

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு +91 98940 10007